அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்.252/2015
தேதி. 12.10.2015

## மீத்தேன் திட்டத்திற்கு நிரந்தரத் தடை
## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி
## ச.ம.க.நிறுவனர்-தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

காவிரி டெல்டா மாவட்டங்களில் சுமார் 691 சதுர கி.மீ பரப்பளவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த மீத்தேன் எரிவாயு திட்டத்திற்கு தமிழக அரசால் எந்தவித அனுமதியும் வழங்கப்பட மாட்டாது என்று தமிழக அரசு பிறப்பித்திருக்கும் அரசாணை மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகவும், விவசாயிகளுக்கு இனிக்கும் செய்தியாகவும் விளங்குகிறது.

மீத்தேன் எரிவாயுத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், நிலவளம் குறையும், நீர் மட்டம் பெரிதும் பாதிக்கப்படும், விவசாயமும், விவசாயிகளும் பெரிய அளவில் பாதிக்கப்படுவார்கள் என்னும் மிகப்பெரிய வருத்தம், தமிழக அரசின் அரசாணை வெளியீட்டால் முடிவுக்கு வந்திருக்கிறது. தமிழக விவசாயிகளுக்கும் இதுவரை இருந்த அச்சம் நீங்கி இருக்கிறது.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே இத்திட்டம் குறித்து ஆய்வு நடத்த வைத்து அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் மீத்தேன் திட்டத்திற்கு அனுமதி கிடையாது என்ற அரசாணை வெளிவரப் பெரிதும் காரணமாயிருந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு சமத்துவ மக்கள் கட்சி சார்பில் எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்

நன்றி,வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.